செ. வெ. எண். 882 நாள் 25.11.09

# பத்திரிக்கை செய்தி

## புதிரை வண்ணார் நல வாரியம்

பொருளாதார, சமூக, கல்வி நிலைகளில் மிகவும் அடித்தளத்தில் வாழ்ந்து வரும் புதிரை வண்ணார் இனத்தைச் சார்ந்த மக்களின் நலத்தில் அக்கறை கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் அறிவித்தபடி புதிரை வண்ணார் இனத்தைச் சேர்ந்த மக்களுக்கென்று தனியாக "தமிழ் நாடு புதிரை வண்ணார் நல வாரியம்" ஒன்று மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நல அமைச்சர் அவர்களை தலைவராகவும், கீழ்கண்ட அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்டும் அமைக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

தலைவர்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்

அலுவல் சார்ந்த உறுப்பினர்கள்:-

1. அரசு செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–9.
2. அரசு செயலர், நிதித் துறை, சென்னைன–9.
3. அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
4. அரசு செயலர், ஊரக வளர்ச்சித்துறை, சென்னை –9.
5. அரசு செயலர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, சென்னை–9.
6. அரசு செயலர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, சென்னை–9.
7. அரசு செயலர், பள்ளிக்கல்வித் துறை, சென்னை –9.

9. இயக்குநர், பழங்குடியினர் நலத்துறை, சென்னை–5

10. மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை–101.

11. ஆணையர், ஊரக வளர்ச்சித் துறை, சென்னை–15.

12. ஆணையர், பேரூராட்சிகள்.

அலுவல் சாரா உறுப்பினர்கள்:

| வ.எண் | பெயர் | மாவட்டம் |
|---|---|---|
| 1. | திரு மா.அன்பழகன்<br><br>சட்டமன்ற உறுப்பினர்<br>பழனி தொகுதி | திண்டுக்கல் |
| 2. | திரு கோவை தங்கம்<br><br>சட்டமன்ற உறுப்பினர், வால்பாறை தொகுதி | கோயமுத்தூர் |
| 3. | திரு து. ரவிக்குமார்<br><br>சட்டமன்ற உறுப்பினர், காட்டுமன்னார் கோவில் தொகுதி | கடலூர் |
| 4. | திரு எஸ். செல்வம் | மதுரை |
| 5. | திரு சு. அந்தோணி | தூத்துக்குடி |
| 6. | திரு ஏ. மனோகரன் | திருநெல்வேலி |
| 7. | திரு த. இசக்கிராஜ் | திருநெல்வேலி |
| 8. | திரு வே. முருகன் | மதுரை |
| 9. | திரு கே ராஜா | விருதுநகர் |
| 10. | திரு ஏ. தங்கபாண்டி | தேனி |
| 11. | திரு இ.ஜி. அருள்வளன் | விழுப்புரம் |
| 12. | கவிஞர் நா. சுப்புலட்சுமி | வேலூர் |
| 13. | திரு அண்ணாதுரை | திருச்சிராப்பள்ளி |

இவ்வாரியம் மூலம் செயல்படுத்தப்படும் மேம்பாட்டுத் திட்டங்கள்:-

(அ) இச்சமுதாய மக்களின் கல்வி அறிவு நிலை பின்தங்கிய நிலையில் உள்ளதைக் கணக்கில் கொண்டு இவ்வினத்தை சேர்ந்த அனைத்து குழந்தைகளையும் பள்ளியில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

(ஆ) இச்சமூகத்தைச் சேர்ந்த மாணவ/மாணவிகளுக்கு தங்குதடையின்றி கல்வியறிவு பெற வசதியாக இத்துறை மூலம் செயல்படும் விடுதிகளை இவர்களை எவ்வித பாகுபாடு இன்றி விண்ணப்பித்த அனைவரையும் சேர்த்துக் கொள்ளுதல்.

(இ) இச்சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா, தொகுப்பு வீடுகள் கட்டித்தருதல்.

(ஈ) இச்சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் பொருளாதார முன்னேற்றம் அடைவதற்கு பொருளாதார திட்டங்களை முழு மான்யத்துடன் வழங்குதமல்.

(உ) தாட்கோ மூலம் வழங்கப்படும் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களில் இவர்களுக்கு கணிசமான அளவில் கிடைக்க நடவடிக்கை எடுத்தல்.

(ஊ) சலவைத் தொழில் சார்ந்த கடைகள் நடத்தவும், தாட்கோ மூலம் சிறுகடன்கள் வழங்கவும் மேலும் இலவச சலவை பெட்டிகள் வழங்கவும் நடவடிக்கை எடுத்தல்.

(எ) இச்சமூதாய மக்களுக்கு பல்வேறு தொழில்களுக்கான பயிற்சி வகுப்புகள் தாட்கோ மூலம் செயல்படுத்தி இவர்கள் தனியாக தொழில் தொடங்குவதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுத்தல்.

4. இவ்வாரியம் புதிரை வண்ணார் இன மக்களின் முன்னேற்றத்திற்காக அரசு மூலம் வழங்கப்படும் அனைத்து நலத்திட்டங்களும் மற்றும் உதவிகளும் சிறப்பான முறையில் தங்கு தடையின்றி கிடைப்பதற்கும் இதனை கண்காணிக்கும் வகையில் செயல்படும்.

விஸ்வாநாத் ஷெகாவ்கர்
முதன்மைச் செயலாளர்

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9